**19TAU19**

# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)

## BA DEGREE EXAMINATION MAY 2019
(Sixth Semester)

Branch – **TAMIL**

**SANGAILAKKIYAM**

Time : Three Hours | Maximum : 75 Marks

**பகுதி - அ**

**(10 x 2= 20)**

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக**

1 உவமையால் பெயர் பெற்ற புலவர்கள் பெயரினைக்குறிப்பிடுக.
2 .பொருளாலே வருவனவாக உகாய்க்குடிகிழார் கூறுவன யாவை?
3 யாழ்வகைகளைக் கூறுக.
4 எயினர் உணவினை எழுதுக.
5 சென்னியின் படைத்தலைவன் பழையன் என்பானை கொன்ற சேரப்படைத்தலைவர்களின் பெயர்களை எடுத்தெழுதுக?
6 தலைவியின் விளையாட்டுப் பொருட்களாக அகநானூற்றில் இடம் பெற்றவை யாவை?
7 முல்லை நிலத்திற்குரிய பெரும் பொழுது சிறுபொழுதினைச்சுட்டுக.
8 பத்துப்பாட்டு நூல்களில் அளவால் மிகச்சிறிய நூல் எது? அந்நூலின் ஆசிரியர் பெயரினைக்கூறுக.
9 "ஈய் என இரத்தலோ அரிதே" – என்ற புறநானூற்றுப் பாடல்வரி யார் யாரைப்பாடியது?
10 மூதின் முல்லை – துறை விளக்கம் தருக.

**பகுதி - ஆ**

**(5 x 5 = 25)**

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக**

11 அ தலைவன் தன் நோயின் தன்மையைப் பாங்கனுக்கு கூறும் விதத்தினை குநற்தொகை பாடல்வழி வெளிப்படுத்துக?

அல்லது

ஆ அள்ளுர் நன்முல்லையார் குறிப்பிடும் தலைவியின் பண்புகளை எடுத்துரைக்க.

12 அ எயிற்பட்டிணத்தில் கிடைக்கும் பொருட்களாக சிறுபாணாற்றுப்படை கூறுவன யாவை?

அல்லது

ஆ உறந்தையின் சிறப்பினைச் சுருக்கி வரைக.

13 அ தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிய விதத்தினை அகநானூற்றுப்பாடல் வழி புலப்படுத்துக.

அல்லது

ஆ தோழிக்கு தலைவி கூறும் வெள்ளிவீதியாரின் பாடலை விளக்குக.

14 அ முல்லைப்பாட்டு குறிப்பிடும் தலைவியின் பிரிவாற்றாமையை எழுதுக.

அல்லது

ஆ மழையினால் செழித்த முல்லை நிலத்தின் வருணனையை எடுத்துஜரக்க?

15 அ அன்னப்பேடைக்கும் பரிசு அள்ளித்தருவான் கிள்ளிவளவன் என்று பிசிராந்தையார் புகழ்ந்து பாடுமாற்றை விளக்குக?

அல்லது

ஆ கோப்பெரு நற்கிள்ளியின் மற்போர் வெற்றியை கண்டறிந்த நக்கண்ணையாரின் பாடலினைச் சித்திரிக்க?

பகுதி - இ

(3 x 10 = 30)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க**

16 குறுந்தொகையில் இடம்பெறும் உவமை நயங்களை நும் பாடப்பகுதி வழி தொகுத்துரைக்க.

17 சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் கடையேழு வள்ளல்களின் சிறப்பினைத் தொகுத்துரைக்க.

18 செவிலிதாய்க்கு தோழி அறத்தொடு நின்றமையை எடுத்துரைக்க.

19 முல்லைப்பாட்டு குறிப்பிடும் பாசறையின் இயல்பினை விவரிக்க.

20 பொன்முடியாரின் புறநானூற்றுப்பாடலின் கருத்துக்களை விளக்கி வரைக.

Z-Z-Z END